1(6)
A3 (Advt)

சுருக்கம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் வீடு / மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில் வட்டிச் சுமையினால் விற்பனைப் பத்திரம் பெற்றிடாத ஒதுக்கீடுதாரர்களுக்கு விற்பனை பத்திரம் வழங்குதல் - தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சுமார் ரூ.53 கோடி வட்டி தள்ளுபடி திட்டம் செயல்படுத்துதல் - ஆணை வெளியிடப்படுகிறது. 19455

==========

வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்[நி.எ.2(1)] துறை

அரசாணை (நிலை) எண்.194

நாள் : 04.11.2022,
சுபகிருது, ஐப்பசி-18,
திருவள்ளுர் ஆண்டு -2053.

படிக்கப்பட்டது:-

1. 2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு.
2. தமிழ்நாடு வீட்டுவசதி மேலாண்மை இயக்குநரின் கடித எண்.ஒதுக்கீடு.1(6)/8697/ 2009, நாள். 01.07.2022.

==========

ஆணை:-

மேலே ஒன்றில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் வீடு / மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில், 14,563 பேர் மாதத்தவணண முடிவுற்றும் விற்பனை பத்திரம் பெற இயலாததை அறிந்து, அவர்களும் விற்பனைப் பத்திரம் பெறும் வகையில், அவர்களின் வட்டி சுமையை குறைக்க, வட்டிச் சலுகைத் திட்டத்தினை செயல்படுத்த 2022-2023-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால் "தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சுமார் ரூ.53 கோடியில் வட்டி தள்ளுபடி திட்டம் செயல்படுத்தப்படும்", என அறிவிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அறிவிப்பிற்கிணங்க பார்வை இரண்டில் காணும் கடிதத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர், அரசிற்கு அளித்துள்ள கருத்துருவில், தற்போது தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் வீடு /

மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்ற ஒதுக்கீடுதாரர்களில், வட்டி சுமையினால் விற்பனைப் பத்திரம் பெறாமல் உள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் வட்டித் தள்ளுபடி சலுகை வழங்குவதன் மூலம் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பீட்டுத் தொகையின் விவரங்களை பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

வ. எண்	கோட்டம் / பிரிவு	விற்பனைப் பத்திரம் வழங்கப்பட வேண்டிய இனங்கள்	மாத தவணை முடிவுற்றும் விற்பனைப் பத்திரம் பெறப்பட வேண்டிய இனங்களின் விவரம்	மாத தவணை முடிவுற்றும் விற்பனைப் பத்திரம் பெறப்பட வேண்டிய இனங்களில் வாரியத்திற்கு பெறப்பட வேண்டிய தொகையின் விவரம் (ரூபாய் இலட்சத்தில்)	மாத தவணை முடிவுற்றும் விற்பனைப் பத்திரம் பெறப்பட வேண்டிய இனங்களில் வட்டி தள்ளுபடி செய்வது மூலம் பெறப்படும் தொகையின் விவரம் (ரூபாய் இலட்சத்தில்)	வட்டி தள்ளுபடி செய்வதால் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பீடு தொகையின் விவரம் (ரூபாய் இலட்சத்தில்)
1.	அண்ணா நகர்	1248	289	140.85	119.63	21.22
2.	ஜெ.ஜெ நகர்	1244	148	131.31	71.04	60.27
3.	கே.கே. நகர்	841	141	404.73	344.61	60.12
4.	பெசன்ட் நகர்	1884	67	175.21	169.99	5.22
5.	திருமழிசை துணைக் கோள் நகரம்	251	180	444.40	334.29	110.11
6.	கோயம்புத்தூர்	3831	3781	6633.99	5041.87	1592.12
7.	ஈரோடு	2505	1992	789.79	552.85	236.94
8.	சேலம்	860	840	443.75	382.96	60.79
9.	ஓதூர்	1605	735	2541.06	2259.48	281.58

Verified by RedEstate

10.	வேலூர்	2256	2052	4802.19	3194.96	1607.24
11.	விழுப்-புரம்	329	321	449.26	353.29	95.97
12.	திருச்சி	1501	1348	1863.69	1489.28	374.41
13.	தஞ்சாவூர்	211	35	79.28	51.23	28.05
14.	மதுரை	1697	1408	2414.17	2197.75	216.42
15.	உச்சப்பட்டி தோப்பூர்	628	628	123.29	109.46	13.83
16.	திருநெல்-வேலி	670	598	218153	1636.15	545.38
	மொத்தம்	21,561	14,563	23,618.5	18,308.84	5,309.67

3. மேலும், கொரானா நோய்த் தொற்று காரணமாகவும் மற்றும் மக்களின் பொருளாதார நிலை காரணமாகவும் வாரிய ஒதுக்கீடுதாரர்களால் வட்டித் தொகையினை முழுமையாக செலுத்த இயலவில்லை என்றும், தற்போது வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டித் தள்ளுபடி சலுகையை அமல்படுத்திடக் கோரி பல்வேறு விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. எனவே, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் வீடு / மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில், விற்பனைப் பத்திரம் பெற்றிடாத 14,563 ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டித் தள்ளுபடி சலுகையை மீண்டும் அமல்படுத்துவதின் மூலம் அவர்கள் நிலுவைத் தொகையினை செலுத்தி, விற்பனைப் பத்திரம் பெற்று பயனடைய ஏதுவாக இருக்கும் எனவும், மேற்படி திட்டத்தினை செயல்படுத்துவதால் வாரியத்திற்கு சுமார் ரூ.53 கோடி இழப்பீடு ஏற்படும் எனவும் தெரிவித்து, அச்சலுகையினை நடைமுறைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்குமாறு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்தது. பரிசீலனைக்குப்பின், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் வீடு / மனை / குடியிருப்பு ஒதுக்கீடு பெற்றவர்களில், விற்பனை பத்திரம் பெற்றிடாத 14,563 ஒதுக்கீடுதாரர்களுக்கு வட்டித் தள்ளுபடிச் சலுகையை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அரசிடமிருந்து எந்த நிதி உதவியும் கோரக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு செயல்படுத்தலாம் என ஆணை வெளியிடப்படுகிறது.

6. மேலும், ஒதுக்கீடுதாரர்கள் தாம் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை இவ்வாணை வெளியிட்ட நாளிலிருந்து ஆறு மாதகாலத்திற்குள் ஒரே தவணையாகவோ அல்லது நிலுவையிலுள்ள அசல் தொகைக்கு நடைமுறையிலுள்ள தனிவட்டியுடன் மூன்று தவணைகளில் செலுத்துவதற்கு விருப்புரிமை அளிக்கப்படுகிறது.

7. வட்டி சலுகையினை ஒதுக்கீடுதாரர்கள் பயன்படுத்திக் கொள்ளவும், ஒதுக்கீடுதாரர்களிடமிருந்து நிலுவைத் தொகை வசூலிப்பதை உறுதி செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.35973/பொ.நி.கு/2022, நாள் 22.09.2022-இல் ஒப்புதலுடன் வெளியிடப் படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹிதேஸ்குமார் எஸ் .மக்வானா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்,
கோயம்பேடு, சென்னை-107.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம்,
தலைமைச் செயலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர்(வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம்,
சென்னை-9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர்,
சென்னை-9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களில் தனிச் செயலாளர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

நகல்:-

நிதி/வீட்டுவசதி/பொது நிறுவனங்கள் குழுத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Verified RedEstate™